தலைவி அவர்கள் கடந்த நிதிநிலை அறிக்கையில் ஒரு புதிய கொள்கையை அறிவித்தார்கள். மழைக் காலங்களில் கடலில் சென்று வீணாகக் கலக்கின்ற மழை நீரைத் தேக்கி குடிநீராகப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திட்டத்தை பரீட்சார்த்தமாக இராமநாதபுரம் மாவட்டத்தில் கடலில் சென்று கலக்கும் நீரைத் தேக்கி குடிநீரைக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதுகுறித்து பொதுப்பணித் துறை பல்வேறு நிலைகளில் ஆய்வுப் பணிகளை மேற்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 235, திரு கே. ஏ. மனோகரன், இருக்கையில் இல்லை.

வினா எண். 236, திரு. டி. சுதர்சனம் இருக்கையில் இல்லை. (குறுக்கீடு) திரு. அ. தேவராஜ், மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்.

236—

தமிழக கரும்பு விவசாயிகளுக்கு மற்ற மாநிலங்களில் வழங்கும் கொள்முதல் விலையை வழங்கல்.

*10653—திரு. டி. சுதர்சனம்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா—

மற்ற மாநிலங்களில் கரும்புக்கு அளிக்கப்படும் கொள்முதல் விலையைப் போல் தமிழக கரும்பு விவசாயிகளுக்கும் வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

இயலாது.

திரு. அ. தேவராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் இயலாது என்று தெரிவித்திருக்கிறார். பொதுவாக கரும்பு விவசாயம் செய்யும் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் ஒரு வருடத்திற்கு ஒரு முறை தான் பணத்தைப் பெறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே அதை வரும் ஆண்டிலாவது ஏற்றிக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு ஒவ்வொரு ஆண்டும் கரும்புக்கு சட்டபூர்வமாக ஒரு விலையை நிர்ணயம் செய்கிறது. இந்த விலையை விட கூடுதலாக ஒரு விலையை மாநில அரசு தனது பரிந்துரை விலையாக நிர்ணயம் செய்கிறது. மாநில அரசு நிர்ணயம் செய்யும் பரிந்துரைகளை மத்திய அரசின் விலையை விடக் கூடுதலாக—கரும்பு உற்பத்திச் செலவு, மற்ற பயிர்களிலிருந்து கிடைக்கும் வருமானம், நுகர்வோர்களுக்கு சர்க்கரை நியாயமான விலையில் கிடைத்தல், சர்க்கரை கட்டுமானம் போன்றவற்றை கணக்கிட்டு விலை நிர்ணயிக்கப்படுகிறது. சர்க்கரை கட்டுமானம் என்பதில் அந்தந்த மாநிலத்தின் சீதோஷ்ண நிலைக்கேற்றவாறு மாறுபடும். வட மாநிலங்களான உத்தரப் பிரதேசம், பீகார், அரியானா, ஆகிய மாநிலங்கள் ஒட்டு மொத்த விலையாகவும், அண்டை மாநிலங்களான கர்நாடகம், ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் 8.5 கட்டுமானத்துக்கு இணைந்த கரும்பு பரிந்துரை விலை அறிவிப்பது வழக்கத்தில் உள்ளது. மிக அதிகமாக கரும்பு விலையை அறிவித்த மாநிலங்களில் ஆலைகள் அந்த விலையை விவசாயிகளுக்குக் கொடுக்கும் சக்தியின்றி, நிதிநிலை பாதிப்பினால் அதிகமான பாதிப்புத் தொகை வைப்பது தெரிய வருகிறது. எனவே தமிழக அரசு செய்யும் முறையே சிறந்தது என நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. கு. தங்கமுத்து.

திரு. கு. தங்கமுத்து : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த தி. மு. க. ஆட்சிக் காலத்தில் மத்திய அரசு இரண்டு முறை கரும்புக்கு விலையை ஏற்றி அறிவித்தும் ஒரு முறை கூட அந்த ஆட்சிக் காலத்தில் விலையை ஏற்றி செயல்படவில்லை. ஆனால், இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு இப்போது இரண்டு முறை கரும்புக்கு விலையை ஏற்றிக் கொடுத்து இருக்கிறது என்பதனை தமிழக விவசாயிகள் நன்றிப் பெருக்கோடு நன்றி செலுத்தக் கடமைப்பட்டு இருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனை நினைவு கூர்ந்து, இந்த ஆண்டு குறைந்த பட்சம் ரெக்கவரி என்ற அடிப்படையில், கரும்பு சத்து கிடைக்கின்ற திறன் அடிப்படையில் கூடுதலாக விலை ஏற்றிக் கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1990-91 ஆம் ஆண்டு தி. மு. க. ஆட்சி நடைபெற்ற போது மத்திய அரசு தன்னுடைய விலையாக ரூ. 230-ஐ அறிவித்தது, மாநில அரசு பரிந்துரை

யோடு சேர்த்து 280 ரூபாய்க்கு அன்றைய தினம் அறிவித்து வழங்கினார்கள். அந்த அறிவிப்பு வந்து இரண்டாவது வாரத்திலே மத்திய அரசு மீண்டும் 20 ரூபாய் கூட்டி அறிவித்தது. ஆனால், அந்த 20 ரூபாய் வேண்டும் என்று தமிழகத்திலே விவசாயிகள் அனைவரும் பல போராட்டங்கள் நடத்திய பின்னரும் கூட, அந்த அரசு அந்தத் தொகையை வழங்க முடியவில்லை. ஆனால், இன்றைக்கு தமிழகத்தினுடைய நம்முடைய ஒப்பற்ற முதல்வர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற உடனே 1991–92 ஆம் ஆண்டிற்கு கரும்பு விலையை தமிழகத்திலே மொத்தமாக, சராசரியாக 419 ரூபாய், இரண்டு மானியங்கள் அடிப்படையில் கிடைத்தது. அதாவது, மாநில அரசு அறிவித்த கரும்பு விலை 352 ரூபாய். அதிக சர்க்கரை சத்து ரக மானியம் டன் ஒன்றுக்கு 25 ரூபாய்; இடுபொருள் மானியம் டன் ஒன்றுக்கு 22 ரூபாய்; போக்குவரத்து மானியம் சராசரியாக 10 ரூபாய் —ஆக சென்ற ஆண்டு விவசாயிகளுக்கு 419 ரூபாய் கிடைத்தது. இந்த ஆண்டு, 1992-93 ஆம் ஆண்டில் நம்முடைய முதல்வர் அவர்கள் முதன்முறையாக மாநில அரசு பரிந்துரை விலையாக 330 ரூபாயை அறிவித்தார்கள். மீண்டும் மத்திய அரசு தன்னுடைய விலையைக் கூட்டியவுடன் நம்முடைய முதல்வர் அவர்கள் மீண்டும் அந்த 40 ரூபாயையும் சேர்த்து வழங்கினார்கள். இதன் வாயிலாக இந்த ஆண்டு விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய தொகை, மாநில அரசு சராசரி கரும்பு விலை 431 ரூபாய் ஒரு டன்னுக்கும், அதிக சர்க்கரை சத்து கரும்புக்கு ரக மானியமாக டன்னுக்கு 25 ரூபாயும், இடுபொருள் மானியம் டன்னுக்கு 22 ரூபாயும், போக்குவரத்து மானியம் டன்னுக்கு 15 ரூபாயும் கிடைக்கிறது. ஆக, இந்த ஆண்டு 493 ரூபாய் ஒரு டன்னுக்கு விவசாயிகளுக்குக் கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன். அதே நேரத்திலே 30 கிலோ மீட்டர் வரை விவசாயிகள் ஏற்றுக் கொண்ட அந்த வாடகையை இன்று குறைத்து, 20 கிலோ மீட்டர் வரைதான் விவசாயிகள் தர வேண்டும் என்ற உத்திரவை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் வழங்கி இருக்கிறார்கள் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. அ. பாப்பா சுந்தரம்.

திரு. அ. பாப்பா சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு விலையை சென்ற ஆண்டு சர்க்கரை சத்தை வைத்துத்தான் இந்த ஆண்டு அந்த விலையையே கொடுக்கிறார்கள். அதனால் இந்த ஆண்டு நல்ல கரும்பை உற்பத்தி செய்து கொடுப்பவர்களுக்கு, அந்த விலை கிடைப்பது இல்லை. ஆகவே, அந்தந்த ஆண்டு சர்க்கரை கட்டுமான சத்தை வைத்து விலைகளை நிர்ணயிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

1993 ஏப்ரல் 2]

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பற்றி அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆ. கு. சீனிவாசன்.

திரு. ஆ. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு.''

என்பது வள்ளுவரின் முதல் வாக்கு ஆகும். அந்த வாக்கு என்னவென்று சொன்னால், எல்லா எழுத்துகளும் அகரத்தை அடிப்படையாகக் கொண்டு இயங்குகின்றன. அதேபோல், உலகம் கடவுளை அடிப்படையாகக் கொண்டு இயங்குகிறது. அதற்கு இலக்கணமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள்,...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சீனிவாசன், இது கரும்பைப் பற்றிய கேள்வி.

திரு. ம. சின்னசாமி ; தலைவர் அவர்களே, கரும்பைப் பற்றிய கேள்வியாக இருப்பதால் இனிப்பாகக் கேட்கிறார்.

திரு. ஆ. கு. சீனிவாசன், : காவல் தெய்வமும் நம் இதய தெய்வமுமாகிய அம்மா அவர்களை மையமாக வைத்துத் தமிழகம் இயங்கிக் கொண்டு வருகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி).

இன்சொலால் ஈத்தளிக்க வல்லார்க்குத் தன்சொலால்
தான்கண் டனைத்திவ் வுலகு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான்தான் காலையில் ஒரு குறள் சொல்லிக் கொண்டிருக்கிறேன். நீங்களும் ஒரு குறள் சொல்லி விட்டீர்கள் கேள்வி நேரத்தில் இரண்டு, மூன்று குறள் சொல்ல வேண்டாம். (சிரிப்பு) கரும்புக்கு வாருங்கள்.

முற்பகல் 10-50

திரு. ஆ. கு. சீனிவாசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனவே, வள்ளுவர் வாக்கிற்கிணங்க, தமிழகத்தை ஆட்சி செய்து கொண்டிருக்கும் தாய் அவர்கள், தமிழக மக்கள் யார் எதை வேண்டுமென்று கேட்கிறார்களோ[

[1993 ஏப்ரல் 2

இல்லையென்று சொல்லாமல், கொடை வள்ளல் தன்மையோடு கொடுத்து அரவணைக்கும் நம் தாயினுடைய ஆட்சியில் ஏழை விவசாயிகள் கரும்பு விவசாயத்தை ஒரு முக்கியமான விவசாயமாக செய்து வருகிறார்கள். எங்களுடைய தாலுக்காவில் செய்யாறில் ஒரு கரும்பு ஆலை உள்ளது. அதுபோன்று, ஆம்பூர் வேலூர் போன்ற ஊர்களிலும் உள்ளது. அங்கே கொடுக்கப்படும் விலையை போல செய்யாறில் கொடுக்கவில்லை. குறைவாகக் கொடுக்கிறார்கள் அந்தப் பகுதி மக்கள் கரும்பு விவசாயத்தை செய்பவர்கள் பொருளாதாரத்தில் பிற்போக்கான நிலைமையில் இருக்கிறார்கள் ஆகவே, மற்ற கரும்பு ஆலைகளில் எவ்வளவு விலை கொடுக்கிறார்களோ, அதற்கேற்ப கொடுக்கவேண்டுமென்று விவசாயிகள் சகட்டுக் கொள்கிறார்கள். இதை அரசு ஏற்று ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கரும்பு விவசாயம் செய்கிறவர்கள் ** இருக்கிறார்கள் என்பது சரியாக இருக்காது. பொருளாதாரத்தில் பிற்போக்கான நிலைமையில் இருக்கிறார்கள் என்று திருத்திக் கொள்ளுங்கள்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒரு சர்க்கரை ஆலையில் கரும்புக்கு அதிக விலை கொடுக்கிறார்கள் என்று சொன்னால் அந்தப் பகுதியில் விளையக்கூடிய கரும்பில் சர்க்கரை சத்து கூடுதலாக இருக்க வேண்டும். அந்த அடிப்படையில் தான் விலை நிர்ணயம் செய்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பல்வேறு தமிழ்ப்பாடல்களை குறிப்பிட்டார்கள். அவர் அவர்களுக்கு வேளாண்மைத் துறையின் சார்பாக ஒரு பாடலை நினைவுக்கு கொண்டு வர ஆசைப்படுகிறேன்.

'நண்டு ஓட நெல் நட வேண்டும்.
நரி ஓட கரும்பு நட வேண்டும்.
வண்டி ஓட வாழை நட வேண்டும்.
தேர் ஓட தென்னை நட வேண்டும்.

இந்த அளவுக்கு இடைவெளி விட்டு நட்டால் நிச்சயமாக அதனுடைய பலன் அந்தப் பகுதி விவசாயிகளுக்குக் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

1993 ஏப்ரல் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் அவர்கள் செய்யாற்றில் கரும்பு கொள்முதல் விலையைக் கொஞ்சம் கூட்ட வேண்டுமென்று சொல்கிறார்கள். அடுத்து திரு. நா.சா. பழனிசாமி.

திரு. நா.சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த சர்க்கரை ஆலைகள் கொடுக்கிற விலையை விட தனியாக நாட்டு சர்க்கரை தயாரிப்பவர்கள் கரும்புக்கு அதிகமாக விலை கொடுத்து கரும்பை எடுத்துச் செல்கிறார்கள் இப்போது சர்க்கரை ஆலைப் பகுதிகளில் கரும்பை பதிவு செய்யாதவர்கள் கரும்பை கூட, அவர்கள் நாட்டு சர்க்கரை தயாரிப்பவர்கள் எடுத்துச் சென்றால், அதை பறிமுதல் செய்ய வேண்டுமென்று வேளாண்மைத் துறை இணை இயக்குநர்களுக்கு ஒரு அரசாணை பிறப்பித்து இருப்பதாக நான் கேள்விப்பட்டேன். அதனால் விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைக்காமல் போகக் கூடிய வாய்ப்பு இருக்கிறது. அதைப்பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்குவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சர்க்கரை ஆலைகளில் நல்ல விலை கிடைக்கிறபோது விவசாயிகள் பதிவு செய்யப்படாத கரும்பை ஆலைக்கு வெட்ட வேண்டுமென்று அரசாங்கத்திற்கு கோரிக்கை வைக்கிறார்கள். சில பதிவு செய்யாத விவசாயிகள் சர்க்கரை சத்து சற்று குறைவாக வந்ததன் காரணமாக விலை குறைவு ஏற்பட்டால், அவர்கள் நாட்டு சர்க்கரை தயாரிப்பவர்களுக்கு விற்பதற்கு அண்டை மாநிலங்களுக்கு எல்லாம் சென்று கொண்டிருக்கிறார்கள். எனவே, இதை ஒழுங்கு படுத்த வேண்டுமென்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க அரசு பரிசீலித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 237, திரு. வி.கே. லட்சுமணன், இருக்கையில் இல்லை. திரு. கே.பி. ராஜு, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர்.

237—

வாலாங்குளத்தில் குடிசை மாற்று வாரியம் மூலம் வீடுகட்டிக் கொடுத்தல்.

*9280—திரு. வி.கே. லட்சுமணன் :

மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா :—

கோவை மாநகராட்சி வாலாங்குளத்தில் பல வருடங்களாக குடிசை போட்டு வசித்து வரும் குடும்பங்களுக்கு அதே இடத்தில் குடிசை மாற்று வாரியத்தின் மூலம் வீடு கட்டிக் கொடுக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

TRUTH ALONE TRIUMPHS